# ‘முஹம்மது மீரான்’ படைப்பில் சமுதாயத்தில் பெண்கள் நிலையும் எதிராக இருக்கும் சவால்களும்

# Status of women in society and the challenges they face in Muhammad Meeran's work

**ச. சிவக்குமார்,** முனைவர் பட்ட ஆய்வாளர், இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை 641 402.

**S. Sivakumar,** Ph.D Scholar, Rathnavel Subramaniam College Of Arts & Science, Sulur, Coimbatore 641 402.

**முனைவர் வா. சித்ரா,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை 641 402.

**Dr V. Chitra,** Associate Professor, Tamil Department, Rathnavel Subramaniam College Of Arts & Science, Sulur, Coimbatore 641 402.

**DOI : 10.5281/zenodo.8109836**

## Abstract

All five of Muhammad Meeran's novels in the file deal with the cruelty of the capitalist class and thereby women. Explains the suffering clearly. She leads a family. Even though she is a woman, the society does not value her. In this community, a woman is kept as a slave to a man from birth to death. Not only that. It is an indisputable fact that this society has placed some restrictions on women to be like this. "Challenges facing the position of women in the society" are investigated in this science. A marriage in which Bavendar does not live in harmony is a marriage of unhappiness. Bharathidasan calls consanguineous marriage a 'closed marriage'. Husband Unhappiness in the family is caused by suspicion of the wife. Doubts that have the power to disrupt domestic life can cause unrest in their lives. Even if the man did the wrong, the women were given severe punishment. Children were also denied education and men tried to bring the girl child under their control after reaching a certain age. They not only tortured the wife for dowry but also killed her for money. They have cheated the women by telling them various love verses and trusting them after their needs are fulfilled.

## ஆய்வுச் சுருக்கம்

தோப்பில் முஹம்மது மீரானின் ஐந்து நாவல்களும், முதலாளி வர்க்கத்தினரின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிட்டு அதன் மூலம் பெண்கள் படும் துன்பத்தினைத் தெளிவாக விளக்குகிறது. ஒரு குடும்பத்தினை வழி நடத்திச் செல்பவள் பெண்ணாக இருந்தாலும் சமுதாயம் அவளுக்கான மதிப்பினைத் தரவில்லை. இச்சமுதாயத்தில் ஒரு பெண் பிறப்பு முதல்

இறப்பு வரை ஓர் ஆணிற்கு அடிமை என்னும் நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளாள். அது மட்டுமின்றி பெண்ணானவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இச்சமுதாயம் சில கட்டுப்பாடுகளையும் வைத்துள்ளது மறுக்க முடியாத உண்மை. 'சமுதாயத்தில் பெண்களின் நிலையும் எதிராக இருக்கும் சவால்களும்" குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**Keywords:** பொருந்தாமணம், மனைவியின் மீது ஐயம் கொள்ளுதல், ஆண் பிள்ளை மோகம், சமயோசிப்புத் திறன், பெண் தொழில்கள். Poruntha Manam, Manaiviyin Mithu Iyam, Aan Pillai Mogam, Samayosippu Thiran, Pen Thozhilgal

**பொருந்தாமணம்**

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக்கூட்டம் காணும் காலை**
**மறையோர் தேத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த்**
**துணைமையோர் இயல்பே"[1]**

**(புலியூர்கேசிகன் 'மணிமேகலை மூலமும் உரையும் வரி 121-122 ப.257)**

பொருந்தாமணம் குறித்து தொல்காப்பியர் எண்வகை மணத்தில் கூறி உள்ளார். திருமணம் என்பது ஓர் ஆண் ஒரு பெண் இருவரும் மனம் ஒத்து வாழ்வதாகும். அவ்வாறு வாழும் போது கணவனுக்குப் பிடித்த செயலை மனைவியும், மனைவிக்குப் பிடித்த செயலைக் கணவனும் செய்து வாழ்ந்தால் இருவருக்குமிடையே ஓர் அன்பு அல்லது பாசப்பிணைப்பு காணப்படும். ஆனால் இன்று நடைபெறும் திருமணங்கள் பல பொருந்தா மணமாகவே காணப்படுகின்றது. ஆயிரம் கனவுகளுடன் வாழ்க்கையைத் தொடங்க நினைக்கும் பெண்ணிற்குப் பெற்றோர்களே எதிரிகளாகின்றனர்.

காசிம்பிள்ளைக்கு மம்மத்தும்மா இளம் வயதில் மூன்றாவது மனைவியாக்கப்பட்டாள். பல கனவுகளுடன் வந்த மம்மத்தும்மா

**"நிறைய அம்மைத் தழும்புகள் இரத்தம்**
**தளம் கட்டிக் கிடக்கும் உருண்டைக்**
**கண்களைப் பார்த்து மயங்கி விழுந்தாள்"[2]** **(சாய்வு நாற்காலி, ப.156)**

கனவு, வெட்கத்துடன் வந்த மம்மத்தும்மா கணவரைப் பிடிக்காமல் வாழாவெட்டியாகவே இருந்து உயிரை விட்டாள். மேலும் ஒரு கீழ்சாதிப் பெண்ணை உயர்சாதி ஆண்களிடமிருந்து காப்பாற்ற இஸ்லாம் சமயத்தில் சேர்த்தனர். ஆனால் திருமணம் என்று வரும் போது

அவளிடம் விருப்பம் எதுவும் கேட்காமல் 'பக்கீர்ஷா என்னும் வயதானவருக்கு மணம் செய்து வைத்தனர். அப்பெண்ணும் வேறு வழியின்றி அவருடன் வாழ்க்கை நடத்தினாள்.

பதின்மூன்று வயதான நூஹுபாத்திமாவுக்கு அறுபது வயது நிரம்பியவரைத் திருமணம் செய்து வைக்கின்றனர். அவர்களுக்குத் தேவை பணம், சொத்து மட்டும் தான்.

**"பதின்மூன்று வயதான தன்**

**ஒரேயொரு சகோதரிக்கு**

**இந்த அறுபது வயதுக் கிழவனா கணவன்?"[3]**

**(ஒரு கடலோர கிராமத்தின் கதை, ப.37)**

பெற்றோர்கள் தன் கடமையை முடித்துக் கொள்கின்றனர். ஆனால் அப்பெண் அவருடன் வாழ்ந்த காலம் ஓராண்டு தான் அதுவும் மனமொத்து வாழவில்லை இதுவும் பொருந்தாமணமே ஆகும்.

நடத்தை கெட்டவராக இருந்த முகமது காசிம் பாய் என்பவருக்கு ஓர் ஏழைப் பெண்ணை மணம் முடித்து வைத்தனார்.

**"இந்தக் கெட்ட மனுசனுக்கு அந்தச்**

**சின்னப் பெண்ணைக் கட்டிவச்சாங்களே**

**மாபாவியோ அல்லா தான் குடுப்பான்"[4] (அஞ்சு வண்ணம் தெரு, ப.173).**

நான்கு மாதம் வாழ்க்கை நடத்திவிட்டு மனைவியை அடித்துத் துரத்தி விட்டார். இது பொருந்தாமணம் மட்டுமல்லாமல் அவருடைய ஆணவத்தினையும் காட்டுவதாக உள்ளது.

**மனைவியின் மீது ஐயம் கொள்ளுதல்**

சங்ககாலம் முதல் தற்காலம் வரை தோன்றிய இலக்கியங்கள் பல கணவன் மனைவியின் மீது ஐயப்படுதல் குறித்து குறிப்பிடுகின்றன. ஆண்கள் பெண்களின் மீது ஓர் ஐய உணர்வுடனேயே காணப்படுகின்றனர்.

கம்பராமாயணத்தில் இராவணன் சீதையை இலங்கைக்குத் தூக்கிச் சென்றான். பின்னர் இராவணனிடமிருந்து சீதையை மீட்டு வந்த இராமன் அவள் மீது ஐயம் கொண்டு தீயில் இறங்க வைத்தான். ஆனால் இராமன் கற்போடு தான் இருந்தானா என்று சீதை ஐயப்படவில்லை. ஆணிற்கும் பெண்ணிற்கும் இந்நிலையில் வேறுபாடு காணப்படுகிறது.

நடத்தைக் கெட்டவனான முகம்மது காசீமுக்கு ஏழைப் பெண்ணை மணம் முடித்து வைத்தனர். அவள் கர்ப்பம் தரித்தாள். உடனே காசிம்

**'நாந்தான் மலடன், எனக்குக் குழந்தை உண்டாகாதே?"[5]**

**(அஞ்சு வண்ணம் தெரு, ப.173)**

என்று கூறி குழந்தையின் தந்தை தான் இல்லை என்று மறுத்து மனைவியை இரவோடு இரவாகத் துரத்திவிட்டார். நடத்தைக் கெட்டவர் தன் கணவர் தான் என்பது மனைவிக்குத் தெரியும். அவரிடம் எதிர்த்துக் கேட்க அவளுக்கு உரிமை வழங்கப்படவில்லை.

முஸ்தபாக்கண்ணுவின் வீட்டில் வேலைக்குச் செல்லும் வேலம்மை அனைவரிடமும் இயல்பாகப் பேசும் குணமுடையவள். இந்தக் குணத்தின் மீது சந்தேகம் கொண்ட இவளது கணவர் மனைவியிடம் எதுவும் கேட்காமல் வீட்டை விட்டுச் சென்று விட்டார். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்பதை அவர் தெரிந்திருக்கவில்லை. மனைவியிடம் கலந்து பேசியிருந்தால் இதற்குச் சரியான தீர்வு கிடைத்திருக்கும். வறுமையினால் வேலைக்குச் சென்று இறுதியில் தன் உயிரையும் மாய்த்துக் கொண்டாள். இவை அனைத்திற்கும் ‘ஐயம்| என்னும் ‘பேயே| காரணம் ஆகும்.

**ஆண் பிள்ளை மோகம்**

'சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையாக இருக்க வேண்டுமென்று ஆண்கள் பலர் நினைக்கின்றனர். பெண் பிள்ளை என்றால் திருமணம் செய்து வைப்பதற்கு அதிக பணம் தேவைப்படும். இதே நேரம் ஆண் பிள்ளை என்றால் வரதட்சணைப் பணம் அதிகமாகக் கேட்கலாம் என்று எண்ணுகின்றனர். அது மட்டுமின்றி ஆண் பெண் பிள்ளைகளை வளர்ப்பதில் வேறுபாடும் காட்டுகின்றனர்.

தாலாட்டுப் பாடுவதில் கூட ஆண் பெண் பிள்ளைகளிடையே வேறுபாடு காணப்படுகிறது. ஆண் குழந்தைக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. பெண்குழந்தைக்கு அத்தகையச் சிறப்புகள் இல்லை.

**“சித்தாறு பத்தி**

**சிறுகடலும் பாசி பத்தி**

**பத்தாத மங்கைக்கு**

**வரம்வாங்கிப்பிறந்தவனே"?[6] (மீ.அ.மு.நாசிர்அலிபாடல்18 வரி, 19) ப.50**

என்று குறிப்பிடுவது போன்று வரம் வாங்கிப் பிறப்பவர்களாக ஆண் குழந்தைகள் மட்டுமே குறிக்கப்படுகின்றனர்.

குழந்தை இல்லாத முஸ்தபாக்கண்ணு ஆண்குழந்தையின் மீது மோகம் கொண்டவராகக் காணப்பட்டார். தனது கைவிட்டுச் சென்ற சொத்துக்களை மகனை வைத்துத் திரும்ப அடையலாம் என்பதில் உறுதியாகக் காணப்பட்டார்.

**“தப்பித் தவறி ஒரு குழந்தைப்**

**பிறக்குமேயானால் அது கடுவனாகத்**

**தான் இருக்க வேண்டும்"[7] (சாய்வு நாற்காலி, ப.64).**

இது, அவர் ஆண் குழந்தையின் மீது கொண்ட மோகத்தினைக் கூறுவதாக உள்ளது.

**பெண் பிள்ளைகளுக்கான கட்டுப்பாடு**

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பர். ஆனால் அந்தக் குழந்தையைச் சிறுவயதிலிருந்தே ஆண்கள் தங்களின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே வளர்க்கின்றனர். குறிப்பிட்டப் பருவத்தில் பிள்ளைகளை வீட்டிற்குள்ளேயே முடக்கி விடுகின்றனர். பிற ஆண்களிடம் பேசக் கூடாது. வீட்டைவிட்டு வெளியில் செல்லக் கூடாது. என அடுக்கடுக்காகக் கட்டளைகளைப் போடுகின்றனர்.

மீராசாவின் மகளான ரூக்கியா, யானையைப் பார்ப்பதற்காகத் தெருவில் தன் சிறு தம்பியுடன் செல்ல முற்படுகிறாள். ஆனால் மீராசா அவளைப் போக விடவில்லை. காரணம் வளர்ந்து விட்டாள் என்பதே ஆகும்.

**“இது வரை தும்பியைப் போல் சுதந்திரமாகப்**
**பறந்து திரிந்த அவளுடைய மெல்லிசான**
**காலில் ஒரு நூல் கட்டு போடப்பட்டது"[8]**
**(துறைமுகம், ப.294)**

என்ற கூற்றினால் தெரியவருகிறது. கட்டுப்பாட்டினால்

**“ஒரு வட்டத்திற்குள் மட்டும் சுழல**
**வேண்டிய இம்சையை எண்ணி**
**வருத்தினாள்"[9] (துறைமுகம், ப.294)**

இது பெண் குழந்தைத் துள்ளி விளையாட வேண்டிய பருவத்தில் அடைத்து வைத்த நிலைமையைக் காட்டுகிறது.

**சமயோசிப்புத் திறன்**

பெண்ணானவள் தீய செயல்களைச் செய்பவர்களைப் பார்த்து பயந்து ஒதுங்கி விடாமல் தந்திரமாகச் செயல்பட்டு அவர்கள் தீயகுணங்களைப் பிறர் அறியுமாறு செய்து வீரப்பெண்மணியாகத் திகழ வேண்டும். அவ்வாறு செயல்படும் போது பெண் சமயோசிப்புத் திறன் பெற்றவளாகச் செயல்பட முடியும்.

மம்மத்தும்மா நீர் சுமந்து கொண்டு வரும் போது கேலிப்பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் ரசாக்கிற்குச் சரியானப் பாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணி மம்மத்தும்மா அவனை விரும்புவதைப் போல நடித்து அவனிடம்

**“மைதீன்பிச்சை மோதீன் இஷா**

**தொழுதுட்டுப் போனபிறகு சுடலைமாடன்**

**குளத்தாங்கரைக்கு வருவீளா?”[10]**

**(அஞ்சு வண்ணம் தெரு, ப.76)**

என்று கெஞ்சலாகக் கேட்டாள். மம்மத்தும்மாவின் பேச்சு ரசாக்கால் நம்ப முடியவில்லை. அன்று இரவு வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டு பலநாள் கனவு நிறைவு பெற போகிறது என்று எண்ணி மகிழ்ச்சியுடன் குளத்தங்கரைக்குச் சென்றான். அவனின் வருகைக்காகக் காத்திருந்த மம்மத்தும்மா அவன் அருகில் நெருங்கியதும்

**“சீலாந்தி மூட்டில் வைத்திருந்த**

**ஏதோ கலவை வெந்நீரை அவனுடைய**

**முகத்திற்கு நேராக எடுத்து வீசியதும்**

**அவன் பயந்து அலறி அடிக்க**

**தெருவுக்கு ஓடினான்”[11] (அஞ்சு வண்ணம் தெரு, ப.78).**

இவ்வாறு மிகத் திறமையாகச் செயல்பட்டு அஞ்சுவண்ணம் தெருவின் பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக மம்மத்தும்மா சமயோசிப்புத் திறனுடன் செயல்பட்டது சிறப்புக்குரியது.

**பெண்ணின் முன்னேற்றத்திற்கான தொழில்கள்**

தற்போதுள்ள காலக்கட்டத்தில் ஒரு வீட்டில் ஒருவர் மட்டும் வேலை செய்து அதில் வரும் வருமானத்தை வைத்துக் குடும்பம் நடத்துவது கடினமான ஒன்றாகும். வளர்ந்து வரும் நாகரிகம், உணவுப் பொருட்களின் அதிக விலை ஆகியவற்றில் தங்களை இணைத்துக் கொள்ள பணம் மிகவும் முக்கியமான ஒன்று. ஆண்கள் மட்டுமே வேலை செய்து அதில் வரும் வருமானத்தில் தன் மனைவி பிள்ளைகளுடன் கால்வயிறு, அரைவயிறு உணவே உண்டு வரமுடியும். இந்நிலையைப் போக்க பெண்களும் ஆண்களைப் போன்று சிறு வேலைகளில் ஈடுபட்டு வீட்டு சுமையில் பாதியை ஏற்றனர். தோப்பில் முஹம்மது மீரானின் நாவல்களான அஞ்சுவண்ணம் தெரு, கூனன் தோப்பு, ஒரு கடலோர கிராமத்தின் கதை, துறைமுகம், சாய்வு

நாற்காலி போன்ற ஐந்து நாவல்களில் பெண்கள் மேற்கொண்ட தொழில்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் ஆண்களுக்குத் துணையாக அவர்களின் தொழிலுக்குப் பெண்கள் சிறு உதவியாக இருந்தனர். சங்ககாலத்தில் (நெய்தல்) உப்பை விற்பனை செய்யும் உமணர் தன்னுடன் மனைவியையும் அழைத்துச் சென்றனர்.

**'மகவுடை மகடூஉப் பகடுபுறம் துரப்ப"[12]**

**மோகன், இரா. புரிமணம் 'சங்க இலக்கியம் பத்துப்பாட்டு' (பகுதி -1 வரி 58 ப.206**

இப்பாடல் வரி, பெண்கள் உப்பு விற்கும் வண்டியுடன் சென்று கொண்டிருந்த செய்தியைக் காட்டுகிறது.

இதே போன்று குறிஞ்சி நிலத்துப் பெண் தினைப்புனம் காக்கிறாள். பச்சைக் குத்துகிறாள். தேன், தினை, விற்கிறாள். குறி சொல்கிறாள். முல்லை நிலத்துப் பெண் மாடு மேய்க்கிறாள். பால், தயிர், மோர், வெண்ணெய் நெய் போன்றவற்றை வீதி, வீதியாகச் சென்று விற்கிறாள். மருதநிலத்துப் பெண் வயல்தொடர்புடைய வேலைகளையெல்லாம் செய்கிறாள். இப்பெண்களெல்லாம் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெற்று அதன் மூலம் தன் வீட்டு வருமானத்தினை சீர் செய்கின்றனர்.

தற்போது கிராமப்புறப் பெண்கள் தங்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டதே மகளிர் சுயஉதவிக் குழுக்களாகும். கிராமப்புறப் பெண்கள் தங்கள் வீடுகளில் ஒரு வேளை அடுப்பு எரிவதையே பெரும்சாதனையாக நினைக்கின்றனர். 'மகளிர் சுயஉதவிக் குழு' என்ற மாயசக்தி நுழைந்து எல்லாவற்றையும் மாற்றி விட்டது. இதன்மூலம் பல ஏழைப் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. அரசு மானியத்துடன் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பதால் பல பெண்கள் பல்வேறு சுயதொழில்களைச் செய்து வருகின்றனர்.

இக்குழு 1992-இல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் உற்பத்திச் செய்யும் பல்வேறு பொருட்களைக் கிராமச் சந்தை மற்றும் இணைய தளம் மூலம் விற்பனை செய்வதற்கு உரிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பாய்முடைதல், முயல்பண்ணை, பூக்கள் அலங்காரம், கைவினைப் பொருட்கள், தீப்பெட்டி தயாரிப்பு போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல் எண்ணற்ற தொழில்களுக்குப் பயிற்சி அளித்து அதில் தேர்ந்து பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். பெண்கள் உழைத்துப் பொருளாதார நிலைமையை உயர்த்திக் கொள்ளுதலே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும். இதனால் பெண்கள், குறிப்பாக விதவைகள் பிறரின் துணையில்லாமல் வாழ்வதுடன், கணவரின் குடும்பச் சுமையைக் குறைக்கும் வகையிலும் செயல்படுகின்றனர்.

கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ள தற்போதைய பெண்கள் பேராசிரியர், ஆசிரியர், பொறியியலாளர், மருத்துவர், அலுவலர்களாக வேலை பார்ப்பதோடு மட்டுமின்றி, ஆண்கள் ஈடுபட்டிருக்கும் அனைத்துத் துறையிலும் ஈடுபட்டுப் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்து வருகின்றனர் என்பது மிகவும் போற்றுதற்குரியது.

**முடிவுரை**

மனித வாழ்க்கையில் பல நிலைகளில் மாறுதல் காணப்பட்டாலும் பெண்களுக்கென்று கூறப்பட்ட கற்பு ஒழுக்கம் மட்டும் இன்றும் மாறாமல் அப்படியே தான் உள்ளது. பிள்ளைகளை நல்ல சிந்தனைகளுடன் வளர்ப்பதும், பெரியோர்களிடத்தில் அன்பு, பாசம், விட்டுக்கொடுத்து வாழ்தல் போன்ற செயல்களே பெண்களைப் பெருமைப்படுத்துகின்றன. பல தொழில்களைப் பெண்கள் மேற்கொண்டு பெண்கள் ஆண்களின் அளவிற்கு தொழில் செய்து பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையைத் தோப்பில் முஹம்மது மீரான் தன் நாவல்களில் கூறி உள்ளார். இவற்றால் பெண்களின் பெருமையையும் பெண்களின் முன்னேற்றத்திற்கானத் தொழில்களையும் அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. புலியூர் கேசிகன், ‘மணிமேகலை மூலமும் உரையும்’, முதல் பதிப்பு ஆகஸ்டு 2019. சென்னை
2. தோப்பில் முஹம்மது மீரான் 2016 சாய்வு நாற்காலி நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்.
3. தோப்பில் முஹம்மது மீரான் 2014 ஒரு கடலோர கிராமத்தின் கதை நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்.
4. தோப்பில் முஹம்மது மீரான் 2019 அஞ்சு வண்ணம் தெரு நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்.
5. தோப்பில் முஹம்மது மீரான் 2019 துறைமுகம் நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்.
6. பாலசுப்பிரமணியன், கு.வெ., விசுவநாதன், அ., புறநானூறு’ (தொகுதி- 1), தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு 1994
7. மோகன், இரா. புரிமணம் 2017 ‘சங்க இலக்கியம் பத்துப்பாட்டு’ (பகுதி -1) நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்.


## References


1. Palier Kesigan. 'Manimekalai Source and Text', First Edition August 2019. Chennai
2. Thopil Muhammad, Meeran 2016 Recliner New Century Book House Ambattur.

3. Thoppil Muhammad Meeran 2014 The Story of a Coastal Village New Century Book House Ambattur.
4. Muhammad Meeran in the grove. 2019 Anju Saram Street New Century Book House Ampathur.
5. Dhoppil Muhammad Meeran 2019 Harbor New Century Book House Ambattur.
6. Balasubramanian. K.V. , Viswanathan. A. , Purananuru' (Volume-1) Tamil University Publication 1994
7. Mohan. Ira. Parimanam 2017 'Sanga Literature Patuppattu (Part-1) New Century Book House Ampathur.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சிவக்குமார். ச, சித்ரா.வா "'முஹம்மது மீரான்' படைப்பில் சமுதாயத்தில் பெண்கள் நிலையும் எதிராக இருக்கும் சவால்களும் "** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 3, சூலை 2023, பக். 1-9

**Cite this Article in English**

**Sivakumar. S, Chitra. V "Status of women in society and the challenges they face in Muhammad Meeran's work"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 3, July 2023, pp. 1-9